வானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) /தனி அலுவலர் அவர்களின்
நடவடிக்கைகள் முன்னிலை: திரு.பி.சுரேஷ்குமார்,பி.ஏ.,

ந.க.எண்: ஆ2/2279/2017

நாள்: 28.05.2018.

பொருள் : மனைப்பிரிவு – வானூர் ஊராட்சி ஒன்றியம் – மாத்தூர் ஊராட்சி – மாத்தூர் கிராமம் சர்வே எண்கள் 452/6, 453/1B, 454/1, 454/3pt ஆகியவற்றில் 3.40 ஏக்கர் (அ) 148104 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள DELUXE VILLAS மனைப்பிரிவிற்கு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் – தொழில் நுட்ப ஒப்புதலை ஏற்பு செய்து வரன்முறை படுத்தி அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை நிலை எண். 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017.
2. அரசாணை நிலை எண். 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் ந.க.எண் 1563/2017/வி.ம. நாள்:13.04.2018.
4. வருவாய் வட்டாட்சியர், வானூர் அவர்களின் ந.க.அ1/1719/2018 நாள்: 11.05.2018.
5. மனுதாரர் தானப்பத்திரம் எண் 2145/2018 நாள்: 17.05.2018.
6. சார்பதிவாளர் (பொ), சார்பதிவாளர் அலுவலகம், வானூர் அவர்களின் ந.க.எண் 197/2018 நாள்: 18.05.2018.
7. மாத்தூர் ஊராட்சி தீர்மான எண்: 5 நாள்: 14.05.2018.
8. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்: 18.05.2018.

உத்தரவு,

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கடிதத்தில் விழுப்புரம் மாவட்டம் வானூர் ஊராட்சி ஒன்றியம் மாத்தூர் ஊராட்சி மாத்தூர் கிராமம் சர்வே எண்கள் 452/6, 453/1B, 454/1, 454/3pt ஆகியவற்றில் 3.40 ஏக்கர் (அ) 148104 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள DELUXE VILLAS என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.168/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.

பார்வை 4–ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் நீல வரைபடத்தில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனையின்படி வானூர், வட்டாட்சியர் அவர்கள் மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்தில் நீர்பாசன வாய்க்கால் எதுவும் தடை செய்யப்படவில்லை/நீக்கம் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

பார்வை 5—ல் காணும் தானபத்திரத்தின் மூலம் மனுதாரர் உள்ளாட்சி துறைக்கு ஒப்படைக்க வேண்டிய குடியிருப்பு மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடுகளான பூங்கா, சாலைகள் உள்ளாட்சிக்கு தானமாக எண் 2145/2018 நாள்: 17.05.2018 தேதியில் வட்டார வளர்ச்சி அலுவலர், வானூர் என்ற பெயருக்கு தான ஆவணத்தின் மூலம் மாற்றம் செய்துள்ளார்.

பார்வை 6—ல் காணும் சார்பதிவாளர் (பொ), வானூர் அவர்களின் கடிதத்தில் மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகளான சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவைகள் உள்ளாட்சி துறைக்கு தான ஆவணம் மூலம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பார்வை 7—ல் காணும் மாத்தூர் ஊராட்சி தீர்மான எண் 5 நாள்:14.05.2018ன் படி மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | :3.40 ஏக்கர் (அ) 148104 சதுரஅடி |
| மொத்த மனைகள் | : 56 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | : 3 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | : 53 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பு | :110450.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | பூங்கா : 11103 ச.அடி (10.05%) |

பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

| | |
|---|---|
| பூங்கா | 11103 சதுர அடி |
| சாலைகள் (1 முதல் 4 வரை) | 32387 ச.அடி |

சிறப்பு நிபந்தனைகள்:

1. உள்ளாட்சித் துறை அங்கீகாரம் அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகாரம பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் சாலைகள் மற்றும் பூங்கா பகுதி ஆகியவற்றின் மீது மனைப்பிரிவு உரிமையாளர் எவ்வித உரிமையும் கொண்டாட முடியாது.

## கட்டணங்கள் விபரம்:

<table>
<tr><th>வ. எண்</th><th>செலுத்தப்படவேண்டிய கட்டண விபரங்கள்</th><th colspan="2">செலுத்தப்பட்ட கட்டண விபரங்கள்</th></tr>
<tr><td>1</td><td>வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30 வீதம் 9233 சதுர மீட்டருக்கு ரூ. 2,76,990/-</td><td colspan="2">0217-Urban Development 60 – Urban Development scheme 800 – Other receipts AT – Receipts under Regularisation charges of Unapproved layouts and plots – DTCP (DPC: 0217-60-800-AT-0007) Amount Rs 2,76,990/- Date: 17.05.2018 SBI Vanur Challan No 30/ 17.05.2018.</td></tr>
<tr><td rowspan="3">2</td><td rowspan="3">வளர்ச்சி கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25 வீதம் 9233 சதுர மீட்டருக்கு ரூ.2,30,825/-</td><td colspan="2">Fund Transfar NEFT</td></tr>
<tr><td>From Account Adress</td><td>To Account Adress</td></tr>
<tr><td>N. Premkumar UCO Bank Bazar Branch, Pondicherry A/C No: 01300110018675, Amount Transfar Rs. 2,30,825/-</td><td>The District Collector Unapproved Layout Villuppuram, State Bank of India, A/C: 37293711607 Date: 18.05.2018. Amount Rs. 2,30,825/-</td></tr>
<tr><td>3</td><td>பரிசீலனை கட்டணம் 56 மனைகளுக்கு ரூ. 500X56</td><td colspan="2">1. DTCP/L/0032665/2017 Date: 29.11.2017 Amount Rs. 1500/-<br>2. DTCP/L/0080124/2017 Date: 12.04.2018 Amount Rs. 12500/-<br>3. DTCP/L/0080242/2017 Date: 12.04.2018 Amount Rs. 14500/-</td></tr>
</table>

| | |
|---|---|
| விற்பனை செய்யப்படாத மனை எண்கள் | 1 to 15, 17 to 28, 31 to 56 |
| விற்பனை செய்யப்படாத மொத்த மனைகள் | 53 |

மாத்தூர் ஊராட்சி மாத்தூர் கிராமம் சர்வே எண்கள் 452/6, 453/1B, 454/ 454/3pt ஆகியவற்றில் 3.40 ஏக்கர் (அ) 148104 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள **DELUXE VILLAS** மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.168/2018 உத்தரவில் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலை ஏற்பு செய்து விற்பனை செய்யப்படாத 53 மனைகளுக்கு மட்டும் வரன்முறை செய்து அனுமதி அளிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ)
வானூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல்:

திரு. N. பிரேம்குமார்,
23/9, ரெங்கநாதன் நகர்
கடலூர் – 607 001

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வானூர்.
} மனைப்பிரிவில் உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை மாற்றம் செய்யும் பொருட்டு.

நகல்: சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
வானூர்.
} மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடாக செய்யப்பட்ட இடத்தினை உள்ளாட்சிக்கு மாற்றம் செய்யும் பொருட்டு.

# நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு. சி.பாஸ்கரத்தொண்டைமான்

ந.க.எண்.1563/2017/விம நாள்:13.04.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள்/மனை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – விழுப்புரம் மாவட்டம் – வானூர் வட்டம் – வானூர் ஊராட்சி ஒன்றியம் – மாத்தூர் ஊராட்சி – மாத்தூர் கிராமம் – ச.எண்கள். 452/6, 453/1B, 454/1, 454/3pt - ஆகியவற்றில் 3.40 ஏக்கர் (அ) 148104 ச.அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள DELUXE VILLAS – அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

படிக்க:

1) அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:13.10.2017
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guidelines) ந.க.எண்.13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017 மற்றும் 07.11.2017
4) மனுதாரர் N. பிரேம்குமார், கடலூர் அவர்களின் விண்ணப்பம் நாள்:29.11.2017

-----

உத்தரவு:

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையின்படியும் பார்வை (3)ல் காணும் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (4)ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, மாத்தூர் கிராமம், ச.எண்கள். 452/6, 453/1B, 454/1, 454/3pt -ஆகியவற்றில் 3.40 ஏக்கர் (அ) 148104 ச.அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள DELUXE VILLAS என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.168/2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

## மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | – | 3.40 ஏக்கர் (அ) 148104 சதுரஅடி |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 56 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | – | 3 |
| விற்கப்பட்ட மனை எண்கள். | – | 16,29,30 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | – | 53 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | – | 1 to 14,15, 17 to 28, 31 to 56 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | – | 110450.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | | |
| பூங்கா | – | 11103 ச.அடி (10.05%) |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:**

1) பரிசீலனைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 1 to 14,15, 17 to 28, 31 to 56 |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை www.tnlayoutreg.in இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் (Regularisation Charges) மற்றும் வளர்ச்சிக் கட்டணம் (Development Charges)

| மனை எண். | பரப்பளவு | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/— வீதம்) (ரூபாய் முப்பது மட்டும்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுரீ மீட்டருக்கு ரூ.25/— வீதம் (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) |
|---|---|---|---|
| 1 to 14, 15,17 to 28, 31 to 56 | 9233 ச.மீ | 9233 x 30 = Rs. 2,76,990/- | 9233 x 25 =Rs.2,30,825/- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தப்பட வேண்டும்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான (Regularisation Charges) அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| Head of Account:<br>0217 – Urban Development 60 – Urban Development scheme<br>800– Other receipts AT– Receipts under **Regularisation Charges** of Unapproved layouts and plots - DTCP<br>(DPC: 0217-60-800-AT-0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சி கட்டணம் (Development Charges) கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்.———————————————————

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 13, 10,17—ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் — 2 நகல்கள்

13/4/2018

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
வானூர் ஊராட்சி ஒன்றியம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:

1) திரு.N. பிரேம்குமார்,
23/9, ரெங்கநாதன் நகர்,
கடலூர் — 607 001

2) உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
விழுப்புரம் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
வானூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம்.

(2, 3) சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

4) சார்பதிவாளர்,
வானூர் சார்பதிவாளர் அலுவலகம்,
வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்

சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு